**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,</u>**

**<u>திருவண்ணாமலை மாவட்டம்.</u>**
**<u>அசல் வழக்கு எண்.54/16</u>**

2023-ம் ஆண்டு மார்ச் திங்கள் 07-ம் நாள் வாதி/பிரதிவாதி சாட்சியாகிய திருமதி.வசந்தா, என்பவரின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின்படி திரு.எஸ்.உதயகுமார், உதவியாளர் என்பவரால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | - திருமதி.வசந்தா |
| வயது | - |
| தந்தை/கணவர் பெயர் | - க.பெ.குப்பன் |
| கிராமம் | - கிளார் |
| வட்டம் | - |
| சாதி | - |
| சமயம் | - |
| தொழில் | - |

<u>07.03.2023</u>
<u>வா.சா.1.</u>

<u>11, 12 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி.</u>

எனது கணவர் குப்பன் முதல் மனைவி செல்வி இறந்த பிறகுதான் என்னை 2வதாக திருமணம் செய்துகொண்டார் என்பதற்கு ஆதாரமான ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வதுபோல் ஆவணம் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே நான் சாட்சியம் அளித்தபோது முதல் மனைவியின் பெயர் லட்சுமி என்று குறிப்பிட்டுள்ளேன். தற்போது செல்வி என்று குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் அவரை லட்சுமி என்றும் செல்வி என்றும் அழைப்பார்கள். நான் லட்சுமி என்றும், செல்வி என்றும் அழைப்பார்கள் என்று வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

2) குப்பன் 3.10.2008ல் இறந்துவிட்டதாக நான் வா.சா.ஆ.1 ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். குப்பனின் தம்பி பெயர் ஜோதிசின்னபையன். 28.08.2006ல் பி-அட்டவணை சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 6 அயிட்ட சொத்தினை குப்பன் ஜோதிக்கு விற்பனை செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. குப்பனுடன் நான் உண்மையில் ஒன்றாக இருந்திருந்தால் அவர் சொத்தை விற்பனை செய்த விவரம் எனக்கு தெரிந்திருக்கும் என்று சொன்னால் சரியல்ல. 01.02.2007ல் 2, 3, 4 வாதிகள் மற்றும் 1, 2, பிரதிவாதிகள், திருஞானம் ஆகியோர்கள் சேர்ந்து கொண்டு 3ம் பிரதிவாதி பெருமாள் என்பவருக்கு மேற்படி சொத்தை மோசடியாக கிரையம் கொடுத்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. 26.02.2007 அன்று மேற்படி அதே சொத்தை கிரையம் பெற்ற 3ம் பிரதிவாதி பெருமாள் ஒரு மகேந்திரகுமார் என்பவருக்கு மோசடியாக கிரையம் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

3) உண்மையில் 8ம் பிரதிவாதி ஜோதிசின்னபையன்தான் குப்பனிடம் கிரையம் பெற்ற சொத்தை 10ம் பிரதிவாதி மயில்வேல் என்பவருக்கு 25.07.2008ல் பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திர முன்னிலைக்கு தாவா பி-அட்டவணை சொத்து 1 முதல் 4 வரையான அயிட்ட சொத்துக்களை எழுதி வைத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. மீண்டும் 8ம் பிரதிவாதி ஜோதிசின்னபையன் மீதமுள்ள பி-அட்டவணை சொத்து அயிட்டம் 5 மற்றும் 6யை 12ம் பிரதிவாதி நாகராஜன் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. 25.09.2014ல் தாவா பி-அட்டவணை 1 முதல் 6 வரையிலான சொத்துக்களை 8 முதல் 10 மற்றும் 12 பிரதிவாதிகள் 11ம் பிரதிவாதிக்கு சரியான பிரதிபலனுக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. 11ம் பிரதிவாதி நீலாகுமாரி கிரையம் பெற்ற பிறகு சொத்துக்களை அவர் பெற்று பட்டா மாற்றம் செய்து அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல.

4) குப்பன் உயிருடன் இருக்கும்போது 2 முதல் 4 வாதிகள், குப்பன் மற்றும் முதல்தாரத்து பிள்ளைகள் சேர்ந்து சில சொத்துக்களை கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதிகள் ஏற்கனவே கிரையம் கொடுத்துள்ள சொத்துக்களையும் சேர்த்து இவ்வழக்கில் பாகம் கேட்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. குப்பன் தனது வாரிசுகளுடன் சேர்ந்து கிரையம் கொடுத்த சொத்தை மீண்டும் அவருடைய வாரிசுகளுடன் சேர்ந்து மோசடியான கிரையம் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. 3ம் பிரதிவாதி பெருமாள் 13ம் பிரதிவாதி மகேந்திரகுமாருக்கு கிரையம் கொடுத்தபோது 13ம் பிரதிவாதி ஏற்கனவே அந்த சொத்தை குப்பன் விற்பனை செய்துவிட்ட சொத்து என்பதை தெரியாமல் கிரையம் பெற்றுக்கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. அதன் பிறகு 17.09.2014 அன்று இதுகுறித்து தெரியவந்த பிறகு ஒரு விடுதலை பத்திரம் எழுதி பி-அட்டவணை சொத்து 1 முதல் 6 அயிட்டங்கள் வரை சொத்தை விடுதலை செய்து கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. விடுதலை பத்திரத்தில் சொத்து ஜோதிசின்னபையன் மகன் மயில்சாமிதான் அனுபவித்து வருகிறார் என்றும், குப்பன் மோசடியான கிரைய பத்திரம் உருவாக்கியுள்ளார் என்ற விவரங்களை குறிப்பிட்டுதான் விடுதலைபத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. அந்த விடுதலை பத்திரத்திலேயே மகேந்திரகுமார் பெற்ற கிரைய பத்திரத்தை ரத்து செய்து எந்தவித உரிமையும் கோர மாட்டேன் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல.

5) நான் இந்த தாவாவில் 11 ஏக்கர் குறித்து தாக்கல் செய்துள்ளேன் என்று எத்தனை அயிட்டம் என்று எனக்கு தெரியவில்லை. 11 ஏக்கருக்கான ஆவணத்தை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் மொத்த சொத்திற்கும் ஆவணம் கொடுத்திருக்கிறேன். நான் 11 ஏக்கர் நிலத்திற்கும் எனது பூர்வீக சொத்து என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள பட்டாவான மூன்று ஆவணங்களில் 10 அயிட்ட சொத்துக்கள் குறித்துதான் தாக்கல் செய்துள்ளேன் என்றும் இதர சொத்துக்கள் குறித்து ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தில் பெருமாள் கவுண்டர் மற்றும் அசனமாபேட்டை அப்பாதுரை என்ற பெயர்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அய்யாதுரை என்பதுதான் எனது மாமனார் பெயர். பெருமாள் கவுண்டர் என் மாமனாரின் அப்பா பெயர். மேற்படி வா.சா.ஆ.3 ஆவணத்தின் பெருமாள் கவுண்டரின் தகப்பனார் பெயர் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ. 4 ஆவணத்தில் பெருமாள் கவுண்டர் மகன் அய்யாதுரை என்று குறிப்பிடப்பட்டுள்ளது அய்யாதுரைதான் எனது மாமனார் என்பதற்கு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணமும், 11, 12 பிரதிவாதிகளுக்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லையென்று சொன்னால் சரியல்ல.

6) வா.சா.ஆ.5 ஆவணத்திலும் பெருமாள் என்ற பெயர் மட்டும்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அவரது தகப்பனார் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றும் அய்யாதுரை எனது மாமனார்தான் என்பதற்கு எந்தவிதமான ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த ஆவணத்திற்கும் 11, 12 பிரதிவாதிகளுக்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லையென்று சொன்னால் சரியல்ல. குப்பனும் அவரது வாரிசுகளும் ஏற்கனவே சொத்துக்களை விற்பனை செய்துள்ளார்கள் என்றும் அதை மறைத்து நாங்கள் தாக்கல் செய்துள்ள இத்தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் குறித்து வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நான் வில்லங்க சான்று போட்டு பார்த்தேன். அந்த வில்லங்க சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான்

அந்த வில்லங்க சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 11, 12 பிரதிவாதிகள் பொறுத்தவரையில் குப்பன் 2006ல் கொடுத்த கிரையத்தின்படி சொத்துக்களை கிரையம் பெற்று பட்டா மாற்றம் செய்து அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. 11 முதல் 13 வரையான பிரதிவாதிகள் சொத்தை கிரையம் பெற்றுள்ளதால் அவர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளேன். இவ்வழக்கு 11ம் பிரதிவாதி தாவா பி-அட்டவணை சொத்தில் 1 முதல் 6 வரையான அயிட்ட சொத்துக்களை சரியான பிரதிபலனுக்கு கிரையம் பெற்று அனுபவித்து வருவதால் எனக்கு மேற்படி சொத்தில் எந்தவித பாக உரிமையும் இல்லையென்று சொன்னால் சரியல்ல. எனவே மேற்படி சொத்துக்கள் குறித்து இத்தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.